# அனைத்து பகுதிகளிலும் சமமான வளர்ச்சி ! எல்லோர்க்கும் பிடிக்கும் கழக தேர்தல் அறிக்கை!

## விருதுநகரில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை...

முதல் பக்கத் தொடர்ச்சி

தம்பி விஜயபிரபாகரனுக்கு வாக்கு கேட்கும் போது, என்னுடைய நினைவுகள் எல்லாம் எங்கே செல்கிறது தெரியுமா? அவருடைய தந்தை என்னுடைய இனிய நண்பர் ஆருயிர் நண்பர் கேப்டன் விஜயகாந்த் அவர்கள், 'மக்கள் ஆணையிட்டால்' என்ற ஒரு திரைப்படத்தில் வேட்பாளராக நடித்தார். அதில் நான் ஒரு கவுரவ வேடமாக ஒரு பாட்டு பாடி வருவேன். அது எதற்காக என்றால், வேட்பாளராக நிற்கும் விஜயகாந்தை ஆதரித்து நான் பாடும் பாட்டு. அந்தப் பாட்டுகூட என் மனதில் ஆழமாக இருக்கிறது. கலைஞர் எழுதிய பாட்டுதான். "ஆற அமர கொஞ்சம் யோசிச்சு பாரு. நீ அடுத்து வரும் தலைமுறையை சிந்திச்சு பாரு" என்று ஒரு பாட்டு வரும். அவ்வாறு, இவருடைய அப்பாவிற்கு ஓட்டு கேட்டு திரைப்படத்தில் நடித்தேன். இன்று அவரின் அருமை மகனுக்கும் முதலமைச்சராக இன்றைக்கு நேரடியாக வாக்கு கேட்டு வந்திருக்கிறேன். தம்பி விஜயபிரபாகரனை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும் என்று உங்களை எல்லாம் நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சிவகாசி சட்டமன்றத் தொகுதி. நமது அன்புச் சகோதரர் ராகுல் காந்தி அவர்களால் அறிவிக்கப்பட்ட நமது வெல்லும் வேட்பாளர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அசோகன் அவர்கள். சிவகாசி நகர்மன்ற துணைத் தலைவராக செயல்பட்டவர். கடந்த முறை அதே தொகுதியில் உங்களுக்காக பணியாற்றியவர். மீண்டும் அசோகனுக்கு கை சின்னத்தில் நீங்கள் உங்கள் பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும்.

நிறைவாக, திருவில்லிப்புத்தூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. மகாலிங்கம் அவர்கள்! வத்திராயிருப்பு தாலுகா இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர். இந்த வட்டாரத்து மக்களுக்காக தொடர்ந்து செயலாற்றி வருபவர். களத்தில் தொடர்ந்து உங்களுக்காக போராடும் அவர் குரல் சட்டமன்றத்தில் ஒலிக்க, தோழர் மகாலிங்கம் அவர்களுக்கு நீங்கள் எல்லாம் கதிர் அரிவாள் சின்னத்தில் உங்கள் பொன்னான வாக்குகளை வழங்கிட வேண்டும்.

உங்களிடம் உரிமையாக, உங்களில் ஒருவனாக இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இந்த 7 மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களுக்கு நான் ஆதரவு கேட்கிறேன். அதுமட்டுமல்ல, மருது சகோதரர்கள் மாதிரி இரண்டு வெயிட்டான அமைச்சர்களை உங்கள் மாவட்டத்திற்கு தந்து, பல்வேறு வளர்ச்சிப் பணிகளை செய்து தந்திருக்கும் பெருமித உணர்வுடன் உங்கள் ஆதரவை நான் கேட்க வந்திருக்கிறேன்.

### கடந்த 5 ஆண்டுகளில் விருதுநகருக்கு செய்த சாதனைகள்!

திராவிட மாடல் ஆட்சியின் கடந்த 5 ஆண்டுகளில் விருதுநகருக்கு செய்த சாதனைகளை

## காமராஜர் பற்றி வரலாறு தெரியாமல் பழனிசாமி பேசுவதா?

சொல்ல நிச்சயமான ஒரு நாள் போதாது. அதனால் சிலவற்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

திருச்சுழி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றி புதிய பேருந்து நிலையம்,

சிவகாசி - திருவில்லிப்புத்தூர் சாலையில் இருக்கும் சாட்சியாபுரத்தில் புதிய ரயில் மேம்பாலம்,

அருப்புக்கோட்டை மற்றும் ராஜபாளையம் அரசு மருத்துவமனைகளில் புதிய கூடுதல் கட்டடங்கள்,

முடுக்கன்குளம் துணைமின் நிலையம்,

காரியாபட்டி மற்றும் திருச்சுழி வட்டங்களில் கண்மாய்கள், அணைக்கட்டுகள் மேம்பாடு,

காரியாப்பட்டி வட்டத்தில் தெற்காற்றின் குறுக்கே புதிய அணை,

பிளவக்கல் அணைப் பகுதியில் பூங்கா,

மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் இருக்கும் சுற்றுலாத் தலமான சாஸ்தா கோயில் அருவிப் பகுதியில் மேம்பாட்டு பணிகள்.

இவை அனைத்திற்கும் மேலாக 40 ஆயிரம் பேருக்கு விருதுநகர் மாவட்டத்தில் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, ஆயிரத்து 286 ஊரக குடியிருப்புகளுக்கு தாமிரபரணியை நீராதாரமாக கொண்டு கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகள்.

இருக்கன்குடி மாரியம்மன் திருக்கோயிலில் 66 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திருப்பணிகள்,

விருதுநகரில் ஒருங்கிணைந்த ஆயத்த ஆடைகள் பூங்கா,

திருச்சுழியில் புதிய சிப்காட் தொழிற்பூங்கா மற்றும் உணவுப் பூங்கா,

அருப்புக்கோட்டை மருத்துவமனை மாவட்ட தலைமையிட மருத்துவமனையாக மேம்படுத்தும் பணிகள், இராஜபாளையம் வட்டம் அயன் கொல்லன் கொண்டானில் 25 ஏக்கரில் 15 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் புதிய தொழிற்பேட்டை, திருவில்லிப்புத்தூரில் புதிய பேருந்து நிலையம், திருத்தங்கல் பகுதியில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க புதிய ரயில்வே மேம்பாலம் ஆகிய பணிகள் நடைபெற்று வருகிறது.

### பழனிசாமி என்றால் பொய் – பித்தலாட்டம் என்று பொருள்!

திருச்சுழியில் அரசு கல்லூரி வேண்டும் என்று கேட்டீர்கள். அந்தப் பணியும் தொடங்கி விட்டது. இன்னும் உங்களுக்கு என்ன வேண்டும் என்றாலும் சொல்லுங்கள். விருதுநகருக்கு நிச்சயம் நான் செய்து தருவேன் என்ற உறுதியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுபோல், சாதனைகள் எதையும் சொல்ல முடியாமல் அவதூறுகளையும், தரம் தாழ்ந்த பேச்சுகளையும் நம்பி பரப்புரை செய்கிறார் பழனிசாமி! பழனிசாமி என்று சொன்னால் அது பொய், பித்தலாட்டம் என்றுதான் பொருளாகும்.

பழனிசாமி சொன்ன பொய்கள் என்று, ஒரு புத்தகமே போடலாம்! அந்த அளவுக்கு பொய்களை சொல்லிக்கொண்டிருக்கிறார். 5 முறை முதலமைச்சராக இருந்த நம்முடைய தலைவர் கலைஞரை பற்றி, பச்சை பொய்யை பேசிய பழனிசாமிக்கு, நான் நெல்லையில் பதிலடி கொடுத்திருக்கிறேன். தான் சொன்ன ஒரு பொய்யில் இருந்து தப்பிக்க, அடுத்தடுத்த பொய்களை கூச்சமே இல்லாமல் சொல்ல தொடங்கியிருக்கிறார். என்ன சொல்கிறார் என்றால்... பெருந்தலைவர் காமராசருக்கு இடம் தர மறுத்தோம், அம்மையார் ஜானகி MGR-அவர்களுக்கு இடம்தர மறுத்தோம் என்று உளறி கொட்டியிருக்கிறார். சங்கி கூட்டணியில் சேர்ந்ததால் அவர்களை போலவே வாட்சாப் வதந்திகளை வாந்தி எடுத்துக் கொண்டிருக்கிறார்.

### சொந்த மகனை போல இறுதி நிகழ்வுகளை செய்தவர் கலைஞர்!

பெருந்தலைவர் காமராசர் மறைவுற்ற போது, சொந்த மகனை போல் உடனிருந்து இறுதி நிகழ்வுகளை செய்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்! காமராசரின் திருவுடலை தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கலாம் என்று சொன்னபோது, "அவர் ஒரு கட்சிக்கு மட்டும் தலைவர் இல்லை, எல்லோருக்குமான தலைவர்! முன்னாள் முதலமைச்சர் என்பதால் ராஜாஜி மண்டபத்தில்தான் வைக்க வேண்டும்" என்று சொன்னவர் தலைவர் கலைஞர் அவர்கள். அவரை கிண்டி காந்தி மண்டபத்தில் தகனம் செய்ய முடிவெடுத்து, நள்ளிரவில் மழையில் நனைந்தபடி அதற்கான இடத்தை தேர்வு செய்தார். முப்படை வீரர்கள் தூக்கிக்கொண்டு வந்த பெருந்தலைவர் காமராசரின் உடலை வாங்கி, பீரங்கி வண்டி மேல் வைத்தது யார் தெரியுமா? தலைவர் கலைஞரும், அன்றைய கர்நாடக முதலமைச்சர் தேவராஜ் அர்ஸ் மற்றும் திமுக அமைச்சர் ராசாராம் ஆகியோர்தான்! தகன மேடைக்கு அருகே இந்திரா காந்தி அம்மையாருடன் கலைஞரும் இருந்தார். இது எல்லாமே வரலாறு!

### இன்னும் அசிங்கப்படுவார் பொய்யர் பழனிசாமி!

பழனிசாமி அவர்கள் சொன்ன பொய் உண்மை என்றால், அந்த காலத்திலேயே இவை சர்ச்சையாகி இருக்கும். பத்திரிகைகளில் செய்தியாகி இருக்கும். ஆனால், அப்படி எதுவுமே இல்லை. தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவர்கள் எழுதிய புத்தகங்களிலேயே கலைஞரை புகழ்ந்துதான் எழுதியிருக்கிறார்கள். அதேபோல், ஜானகி MGR அவர்கள் மறைந்த சில நாட்களிலேயே, ராமாவரம் தோட்டத்தில் இருக்கும் MGR இல்லத்தில் ஜானகி MGR அவர்களின் படத்தை திறந்து வைத்தவர் தலைவர் கலைஞர்! ஆர்.எம்.வீரப்பன், ராமசாமி உடையார், வழக்கறிஞர் N.C. ராகவாசாரி ஆகியோரும் உடனிருந்த நிகழ்வு அது. சில காலம் மட்டுமே முதலமைச்சராக இருந்த ஜானகி MGR அவர்களின் படத்தை, அதிமுக தலைவர்களே கோட்டையில் மாட்டவில்லை. தலைவர் கலைஞர்தான் 1996-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு கோட்டையில் அவர்கள் படத்தை மாட்ட சொன்னார். அந்த அளவிற்கு அவரை மதித்தார். முந்தாநாள் அடித்த காற்றில் முதலமைச்சராகி, மக்களால் தூக்கியெறியப்பட்ட பழனிசாமிக்கு இதெல்லாம் தெரியுமா? தப்பு செய்தால் வருத்தம் தெரிவிப்பதுதான் நல்ல மனிதருக்கான இலக்கணம். அதை விட்டுவிட்டு, மேலும் மேலும் பொய்களை சொன்னால், பழனிசாமி இன்னும் அசிங்கப்பட்டுத்தான் போவார்.

இப்போது புதிதாக இன்னொரு பொய்யை சேர்த்திருக்கிறார்! "அரசு ஊழியர்களை ஆசை வார்த்தை காட்டி, திமுக அரசு ஏமாற்றிவிட்டது!"



கழகத் தலைவரும் – முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.4.2026) விருதுநகரில் நடைபெற்ற சட்டமன்ற பொதுத்தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில், சாத்தூர் தொகுதி கழக வேட்பாளர் அ. கடற்கரை ராஜ், ராஜபாளையம் தொகுதி கழக வேட்பாளர் செள. தங்கப்பாண்டியன், விருதுநகர் வடக்கு மாவட்ட கழக செயலாளரும், திருச்சுழி தொகுதி கழக வேட்பாளருமான அமைச்சர் தங்கம் தென்னரசு, விருதுநகர் தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அருப்புக்கோட்டை தொகுதி கழக வேட்பாளருமான அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் விருதுநகர் தொகுதி வேட்பாளர் வி. விஜய பிரபாகர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருவில்லிபுத்தூர் தொகுதி வேட்பாளர் மகாலிங்கம், காங்கிரஸ் கட்சியின் சிவகாசி தொகுதி வேட்பாளர் கணேசன் அசோகன் ஆகியோரை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். இக்கூட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர் சீனிவாசன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் தனுஷ் குமார், கூட்டணி கட்சி நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சார்ந்த நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

என பழனிசாமி பேசியிருக்கிறார். அப்படி ஏமாற்றி இருந்தால், அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் என்னை கோட்டையில் சந்தித்து, நன்றி சொல்லி எனக்கு இனிப்பு ஊட்டுவார்களா? சொல்லுங்கள்! நிறைவேற்றவே முடியாது என்று சொன்னதை நாம் செய்துவிட்டோம் என்பதை தாங்கிக்கொள்ள முடியாமல், கடுப்பில், பழனிசாமி இப்படி எல்லாம் பேசிக் கொண்டு திரிகிறார். இலட்சக்கணக்கான அரசு ஊழியர்களை நாங்கள் மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறோம். அரசு ஊழியர்கள், ஆசிரியர்களை கொடுமைப்படுத்தி, கொச்சைப்படுத்தி, அவர்களுக்கு தரும் ஊதியத்தையும் இழிவுபடுத்தி பேசிய பழனிசாமிக்கு அவர்களிடம் இருந்து, ஸ்வீட்டும் கிடைக்காது! அவர்களின் ஓட்டும் கிடைக்காது! இதுதான் உண்மை.

இங்கு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் அமர்ந்திருக்கிறார். இதை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என்று எவ்வளவு முயற்சிகள் எடுத்தோம் என்று அவருக்கு முழு விவரம் தெரியும். நம்முடைய வரிப்பணம் மொத்தத்தையும் வாங்கி, பா.ஜ.க. ஆளும் வட மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு கொடுக்கிறார்கள். இதனால் ஏற்படுத்தப்படும் செயற்கையான நிதி நெருக்கடியை மீறி, இந்த ஓய்வூதிய திட்டம் உள்ளிட்ட எல்லாவற்றையும் நாம் நிறைவேற்றிக் காட்டியிருக்கிறோம்.

### எடப்பாடி துரோகம் பண்ணாத தரப்பே தமிழ்நாட்டில் இல்லை!

அரசு ஊழியர்களுக்கு மட்டுமா துரோகம் செய்தார்! பழனிசாமி துரோகம் பண்ணாத தரப்பே தமிழ்நாட்டில் இருக்க முடியாது! மூன்று

## அரசு ஊழியர்களுக்கு துரோகம் இழைத்த பழனிசாமி!

வேளாண் சட்டங்களை ஆதரித்து உழவர்களுக்கு துரோகம்! பொள்ளாச்சியில் பாலியல் குற்றவாளிகளை காப்பாற்ற முயற்சி செய்து, பெண்களுக்கு துரோகம்! குடியுரிமை திருத்த சட்டம், வக்பு திருத்த சட்டம் என்று பா.ஜ.க.வின் எல்லா சட்டத்திற்கும் ஆதரவு கொடுத்து சிறுபான்மை சமூகத்திற்கு துரோகம். கட்சியில் உங்களை வளர்த்துவிட்ட, செங்கோட்டையனுக்கு துரோகம், பதவி கொடுத்த அம்மையார் சசிகலா, தினகரனுக்கும் துரோகம், சகோதரர் ஓ.பி.எஸ். அவர்களுக்கு துரோகம், உங்கள் ஆட்சியை காப்பாற்றிய முன்னாள் சட்டப் பேரவையின் தலைவர் தனபால் அவர்களுக்கே சீட்டு கொடுக்காமல் துரோகம், எல்லாவற்றிற்கும் மேல், மாநில உரிமைகளுக்கு எதிராக செயல்பட்ட பா.ஜ.க.வை எதிர்த்த அம்மையார் ஜெயலலிதா அவர்களுக்கு, அதே பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்து துரோகம். இப்போது நான் சொன்ன துரோகத்தை உங்களால் எண்ண முடிந்ததா? ஆனால், பழனிசாமியின் தேர்தல் தோல்விகளை கூட நீங்கள் எண்ணிவிடலாம்.

ஏற்கெனவே "பத்து, அடுத்தது 11"! பாகுபலி படத்தில் சத்தியராஜை பார்த்து சொல்வது மாதிரி ஒரு டயலாக் வரும். "விசுவாசத்திற்கு ஒரு உருவம் இருந்தால் அது நீதான் கட்டப்பா" அப்படி ஒரு வசனம் இருக்கும். அதுபோல், துரோகத்திற்கு ஒரு உருவம் கொடுத்தால் அது பழனிசாமிதான்! இப்படி, தன்னை நம்பிய அத்தனை பேருக்கும் அல்வா கொடுத்த பழனிசாமி பேசுவதை மக்கள் எப்படி நம்புவார்கள்? அதுவும், நீங்கள் ஆட்சி செய்த இலட்சணத்தைத்தான் தமிழ்நாடு 4 ஆண்டுகள் பார்த்ததே!

### தொலைநோக்கு கொண்ட தேர்தல் அறிக்கை!

ஆனால், 2021-இல் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு சொன்ன வாக்குறுதிகளை எல்லாம், படிப்படியாக நிறைவேற்றி மக்களின் நம்பிக்கையை பெற்ற அரசு நம்முடைய திராவிட மாடல் அரசு! வெற்றி பெற்ற தொகுதி, வெற்றி பெறாத தொகுதி, வெற்றி பெற்ற மாவட்டம், வெற்றி பெறாத மாவட்டம் என்று எந்த பாகுபாடும் காட்டாமல், எல்லா பகுதிகளையும் சமமாக வளர்த்தெடுத்து இருக்கிறோம். அதனால்தான், நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல், 2024 நாடாளுமன்றத் தேர்தல்களில், தமிழ்நாடு முழுவதும் முழு வெற்றியை மக்கள் கொடுத்திருக்கிறார்கள். இப்போது, 2030-ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை எப்படியெல்லாம் வளர்த்தெடுக்கப்போகிறோம் என்று, தொலைநோக்கு கொண்ட செயல்திட்ட அறிக்கையாக, தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையை வெளியிட்டிருக்கிறேன். அதாவது நம்முடைய சூப்பர்ஸ்டாரை களத்தில் இறக்கிவிட்டு, நான் பிரச்சாரத்தில் இறங்கியிருக்கிறேன்.

ஒரு பாட்டு வரும்... "சூப்பர் ஸ்டாரு யாருனு கேட்டா சின்ன குழந்தையும் சொல்லும்" அது போன்று... இதுதான் தற்போது சூப்பர் ஸ்டார். எல்லோரும் இதைப்பற்றித்தான் பேசுகிறார்கள்.

### திட்டங்களால் பயன் பெற்றவர்கள்!

அது என்னவென்றால்,

மகளிருக்கு மாதம் ஆயிரம் உரிமைத் தொகை என்று சொன்னோம். இன்றைக்கு இந்தியாவிற்கே மாடலாக நம்முடைய கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மாறிவிட்டது. இந்த திட்டத்தால் பலரது வாழ்க்கையும் மாறிவிட்டது.

புதுக்கோட்டையை சேர்ந்த செல்வி என்ற சகோதரி கொடுத்த பேட்டியை நீங்களும் பார்த்திருப்பீர்கள். நானும் பார்த்தேன். கணவரை இழந்து விட்டார். இரண்டு பெண் பிள்ளைகள். வீட்டு வேலைக்கு சென்று குடும்பத்தை காப்பாற்றுகிறார்கள். தினம் ஒரு வீட்டை சுத்தம் செய்து, பாத்திரங்களையெல்லாம் கழுவி வைக்க வேண்டும் என்றால் அதற்கே ஒரு மணி நேரம் ஆகிவிடும். இப்படி நிறைய வீடுகளுக்கு சென்று வேலை பார்க்க வேண்டும். உடம்பெல்லாம் வலிக்கும். ஆனால், இப்போது மாதம் ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத்தொகை கிடைப்பதால், ஒரு வீட்டை குறைத்துவிட்டேன் என்று அவர்கள் சொல்கிறார்கள். "வெறும் ஆயிரம் ரூபாய், இதை வைத்து என்ன செய்ய முடியும்" என்று சிலர் கேட்டார்களே! செல்வி போன்ற சகோதரிகளுக்கு தினமும் ஒரு மணி நேரம் ஓய்வை இந்த திட்டம் வழங்கியிருக்கிறது. இனி அந்த மகளிர் உரிமைத் தொகை மாதம் ஆயிரம் ரூபாய் இல்லை, மாதம் ரூ.2 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்தி அறிவித்திருக்கிறோம்! தாய்மார்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சியா? சொன்னபடியே 2 ஆயிரம் தருவோம் என்பதற்கான டிரெயிலர்தான் கோடைக் கால சிறப்பு நிதி சேர்த்து, அண்மையில் கொடுத்த 5 ஆயிரம் ரூபாய்!

அதேபோன்று, மதுரையை சேர்ந்த அர்ச்சனா என்கிற சகோதரி, காலை உணவுத் திட்டத்தால் பயனடையும் கதையை சொன்னார்கள். வசதி இல்லாத காரணத்தால், ஒரு நாளைக்கு ஒரு வேளைதான் சமைப்போம். காலையில் சமைக்க மாட்டோம். முன்பெல்லாம் சாப்பிடாமல் பள்ளிக்கூடத்திற்கு சென்ற என் மகளுக்கு, இப்போது காலை உணவு திட்டத்தால் நேரத்திற்கு, சூடான உணவு கிடைக்கிறது. அதுவும், சாம்பாரில் போடும் காய்கறிக்காகவே விரும்பி சாப்பிடுகிறாள். சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு நிறைய பரிசுகள் எல்லாம் பெறுகிறாள்.

நான் படித்த காலத்தில் இப்படி ஒரு திட்டம் இருந்திருந்தால், நானும் காலேஜுக்கு சென்று படித்து பெரிய ஆளாகியிருப்பேன் என்று நெகிழ்ச்சியுடன் சொல்கிறார்கள். அந்தக் காலை உணவு திட்டத்தையும் அடுத்து அமையவுள்ள நம்முடைய ஆட்சியில், ஐந்தாம் வகுப்பு வரை இருக்கும் திட்டத்தை எட்டாம் வகுப்பு வரை விரிவுபடுத்த போகிறோம். இப்படி நம்முடைய ஒவ்வொரு திட்டத்திற்கு பின்னும் ஒரு குடும்பம், ஒரு தலைமுறை, ஒரு ஊரே வளர்ச்சி அடைந்த கதைகள் நிறையவே இருக்கிறது.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்



உதயசூரியன் மீண்டும் உதித்திட, உழைப்பை மட்டுமே மூலதனமாகக்

கொண்டியங்கும், ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்!